புகார்கள் வந்திருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம். தற்சமயம், அப்படி எந்தப் புகாரும் இல்லாத காரணத்தினால் இந்த கேள்விக்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 312, டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

312—

காளிப்பட்டியில் கைத்தறி சொசைட்டி செயல்பட நடவடிக்கை

***21659**-*டாக்டர் வெ. சரோஜா* :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மல்லசமுத்திரம் ஒன்றியம், காளிப்பட்டியில் ஆதிதிராவிடர் கைத்தறி சொசைட்டி சரிவர செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், டி.என்.84 ஆதிதிராவிடர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு மற்றும் உற்பத்தி விற்பனை சங்கத்தில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நலிவுற்ற நிறுவனமாகவே இது இயங்கிக் கொண்டுவருகிறது. என்னுடையத் தொகுதியைச் சார்ந்த ஆதிதிராவிடர் நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அந்த நிறுவனங்கள் இலாபகரமாக அமைய என்னென்ன நடவடிக்கைகள் அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லசமுத்திரம் ஒன்றியம், காளிப்பட்டியில்

1995 ஏப்ரல் 17]

செயல்படும் கூட்டுறவு சங்கம் 13-6-1986-ல் நூறு தறிகளோடு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இந்தச் சங்கத்தில் இப்போது 28 உறுப்பினர்கள் மட்டுமே வருகை தந்து கொண்டிருக்கின்றார்கள். அதற்குக் காரணம், அவர்கள் விசைத்தறித் தொழிலுக்கு மாற்றலாகி போய்விட்ட காரணத்தினால் சங்கம் இன்றைக்கு செயல் இழந்து நிற்கிறது. அவர்கள் தொடர்ந்து இந்தச் சங்கத்திலே நெய்வதற்கு விருப்பம் தெரிவிக்காதிருந்த காரணத்தினாலும், விவசாய கூலி வேலைகளுக்குச் சென்று விடுகின்ற காரணத்தினாலும், இந்தச் சங்கம் நலிவடைந்துவிட்டது. ஆனாலும், இந்த சங்கத்தை, ஆதி திராவிடர்களுக்கு, எந்த மாநிலத்திலேயும் செயல்படாத திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகின்ற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அடாப்ஷன் முறையிலே, இந்தச் சங்கத்தினுடைய நடவடிக்கைகளை செயல்படுத்தி, அதன்மூலம் இலாபம் ஈட்டுவதற்கு உத்திரவிட இருக்கிறார்கள். அந்த வகையிலே இது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடாப்ஷன் மூலம் மீண்டும் செயல்படுத்தப்படும் எனில் எந்த வங்கியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ? அங்கு உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்கள் பயன் ஈட்டும் வகையில் எந்தெந்த வகை துணிகள் உற்பத்தி செய்வதன் மூலம் அதிகமான இலாபத்தை ஈட்ட முடியுமோ அதற்கான சிறப்பு பயிற்சி அளித்து பிறகு அந்த நிதி உதவியும் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடாப்ஷன் முறையில் சங்கம் செயல்படும் என்று சொன்னால் இந்தத் தறிகள் அடுத்த சங்கத்தோடு இணைக்கப்பட்டு அங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அதிகப்படியாக தறிகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். அதற்கு இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் மத்திய கூட்டுறவு வங்கியிலே சேலத்திலேயே காசுக் கடன் பெறுவதற்குரிய அனைத்து முயற்சிகளையும் இன்றைக்கு அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் நிரம்ப வந்தால் அவர்களுக்கு பணி கொடுப்பதில் சங்கத்திற்கு எந்தச் சிரமமும் இல்லை. ஆனால் உறுப்பினர்கள் வராத காரணத்தினாலேயேதான் இந்த அடாப்ஷன் முறையை இன்றைக்கு அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது.